# நவம்பர் 9 ஒருவரி நடப்பு நிகழ்வுகள்

- பீகார் அரசு 2018 முதல் பட்டம் பெறும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ. 25,000 வழங்குவதற்கான ஒரு திட்டத்திற்கு ஒப்புதல்.
- சபாநாயகர் சுமித்ரா மகாஜன் மக்களவையின் பொதுச்செயலாளர் சினேகலதா ஸ்ரீவஸ்தவாவின் பதவியை ஒரு ஆண்டு காலம் பதவி நீட்டிப்பு செய்தார்.
- உத்தராகண்ட் தனது 18 வது துவக்க தினத்தை கொண்டாடுகிறது. உத்தரபிரதேசத்திலிருந்து பிரிந்து தனி மாநிலமாக உத்தராகண்ட் உருவானது.
- மத்துவா மற்றும் நாமசூத்ரா சமூகங்களுக்கான மேம்பாட்டு வாரியங்களை அமைக்க மேற்கு வங்க அரசு முடிவு செய்துள்ளது.
- நாட்டில் சட்டவிரோதமாக நுழைந்து தஞ்சம் கோர இனி அமெரிக்கா அனுமதிக்காது எனத்தகவல்.
- பாராளுமன்றத் தேர்தல் டிசம்பர் 23 ம் தேதி வங்கதேசத்தில் நடைபெற உள்ளது.
- நாவல் 'பயோனிக் காளான்கள் மூலம் மின்சாரம் உற்பத்தி.
- சீனா செயற்கை நுண்ணறிவு செய்தி அறிவிப்பாளர்களை அறிமுகப்படுத்தியது.
- அமெரிக்கா, சீனா வர்த்தக தகராறுகளைத் தீர்க்க பேச்சுவார்த்தை.
- இந்திய ஏற்றுமதியாளர்கள் உணவு மற்றும் வேளாண் வாங்குபவர் விற்பனையாளர் சந்திப்பு (பிஎஸ்எம்) சவுதி அரேபியாவில்நடைபெற்றது.
- மாற்றுத் திறனாளி இளையோருக்கான சர்வதேச தகவல் தொழில்நுட்ப சவால் - 2018 புது தில்லியில் நடக்கிறது.
- பொது மற்றும் வணிக விஷயங்களில் பரஸ்பர சட்ட உதவி, குற்றவாளிகளை நாடுகடத்த இந்தியா- மொரோக்கோ நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் செய்து கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல்.
- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைகளில் பயிற்சி மற்றும் கல்வியைத் தொடர்வதற்காக இந்தியா-இத்தாலி இடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் பழங்குடிகளுக்கான மத்திய பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்.
- சிங்கப்பூர் மற்றும் இந்தியா இருதரப்பு கடற்படை பயிற்சி [SIMBEX]ன் வெள்ளி விழா இந்தாண்டு கொண்டாடப்படுகிறது.
- கே9 வஜ்ரா, எம்777 ஹோவிட்ஸர் துப்பாக்கிகள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டன.
- கயானாவில் நடைபெறும் ICC மகளிர் உலக டி20 போட்டியில் நியூசிலாந்துக்கு எதிராக இந்தியா துவக்க ஆட்டத்தில் விளையாடுகிறது.

**Join Us on FB:**

**For English – Examsdaily** **For Tamil – Examsdaily Tamil**

For WhatsAPP Group - Click Here